அமெரிக்கா-இலங்கை பங்காண்மை உரையாடலின் நான்காவது அமர்வு
அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட்

ஊடகங்களிடம் தெரிவித்த கருத்துக்கள்
2022, மார்ச் 23.

கொவிட் காரணமாக ஏற்பட்ட நீண்ட இடைவெளிக்குப் பிறகு, எமது வருடாந்திர பங்காண்மை உரையாடலை ஒருவரையொருவர் நேரில் சந்தித்து புதுப்பிக்க முடிந்ததில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நிச்சயமாக, இலங்கையுடனான எமது பங்காண்மையானது 70-இற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக வலுவாக உள்ளது. இதில் கடினமான கொவிட் காலமும் அடங்கும். அக்காலத்தில் தடுப்பூசிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைந்தோம். எனினும் இலங்கைக்கு மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு கடினமான மற்றும் முக்கிய தருணத்தில் நாம் வருகை தந்துள்ளோம். இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் ஒரு முக்கிய சந்தியில் அமைந்துள்ள இலங்கை அமெரிக்காவின் முக்கிய பங்குதாரராக இருப்பதுடன், இந்த இக்கட்டான தருணத்தில் உங்களுக்கு உதவிசெய்ய நாம் ஆர்வமாக உள்ளோம்.

சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் மற்றும் வெளிநாட்டமைச்சர் கூறியது போல், விதிகள் அடிப்படையிலான, ஜனநாயக, சர்வதேச ஒழுங்குக்கான ஒரு உறுதிப்பாட்டை நாம் பகிர்ந்து கொள்கிறோம். வெளிநாட்டமைச்சர் கூறியது போல், அமெரிக்காவுடன் கூட்டிணைந்து மிகவும் வலுவான, மிகவும் ஜனநாயக, மிகவும் செழிப்பான, மிகவும் நியாயமான இலங்கைக்கான அபிலாஷைகள் தொடர்பாக ஒரு பரந்துபட்ட மிகவும் கருத்துச்செறிவுடைய கலந்துரையாடலை நாம் மேற்கொண்டோம்.

அவ்வாறான பின்னணியில், அண்மைய வாரங்களிலும், நாட்களிலும் இங்கு தேசிய குணப்படுத்தலுக்காக, மனித உரிமைகள், நீதி என்பன தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கைகளை, குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக நேற்று நிறைவேற்றப்பட்ட திருத்தங்கள் மற்றும் சில சிறைக்கைதிகளின் விடுதலை ஆகியவற்றை நாம் பாராட்டுகிறோம்.

ஏனைய எவரை விடவும் நீங்கள் நன்றாக அறிந்திருப்பது போல், செய்வதற்கு இன்னும் நிறைய விடயங்கள் உள்ளன. நீங்கள் அந்த முக்கியமான பணியைத் தொடரும்போது உங்களுடன் இணைந்து பணியாற்ற நாம் எதிர்பார்க்கிறோம்.

வெளிநாட்டமைச்சர் கூறியது போல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வெள்ளிக்கிழமை சந்திக்கும் ஜனாதிபதியின் தீர்மானம் மிகவும் முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். அது நாம் வரவேற்கும் ஒரு விடயமாகும். கடினமான வரலாற்றைக் கொண்ட பிற நாடுகள் செய்ததைப் போல, குறிப்பாக தென்னாப்பிரிக்காவின் அனுபவத்தைப் பயன்படுத்தி, உண்மையைக் கண்டறியும் ஒரு பொறிமுறையை அமைப்பது ஒரு நல்ல படியாகும் மற்றும் அச்செயன்முறையை ஆதரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

அரச சார்பற்ற துறை, ஊடகவியலாளர்கள், சிவில் சமூகம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் மற்றும் கண்காணிப்பு, தடுப்புக்காவல், துன்புறுத்தல் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதன் முக்கியத்துவத்தையும் நாம் அடிக்கோடிட்டுக் காட்டினோம். இன்றய நாளின் பிற்பகுதியில் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மற்றும்

வெளிநாட்டமைச்சரும் அப்பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் சில கரிசனைகளைக் கேட்கப் போகிறார் என்பதை அறிந்து கொள்வதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மாகாண சபைத் தேர்தல்களையும் ஜனநாயக வெளியை விரிவுபடுத்துவதையும் நாம் ஊக்குவிக்கிறோம்.

ஆனால் ஒட்டுமொத்தமாக நான் குறிப்பாக வெளிநாட்டமைச்சரையும், தேசிய குணப்படுத்துதல் மற்றும் மற்றும் நீதி தொடர்பான இந்த எல்லாப் பிரச்சினைகளிலும் முன்னோக்கி நகர்வதில் நீதி அமைச்சருடனான அவரது பங்காண்மையினையும் நான் பாராட்ட விரும்புகிறேன். நீங்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அது எமது பங்காண்மையினை வலுப்படுத்துவதற்கான வெளியினை இன்னும் அதிகமாகத் திறக்கும், குறிப்பாக பாதுகாப்புத் துறையில். ஏற்கனவே கடல்சார் தளத்திலும், வான்பறப்பியல் தளத்திலும் எமது பாதுகாப்புப் பங்காண்மை வலுவாக உள்ளது. உங்களுக்குத் தெரிந்தவாறே, எமது இரண்டு அமெரிக்கக் கப்பல்கள் தற்போது இலங்கை கடற்படையில் சேவையில் உள்ளன. மற்றொன்று கையளிப்பதற்காகத் தற்போது தயாராகிக் கொண்டிருக்கிறது வருகிறது, எதிர்வரும் வாரங்களில் உங்கள் மாலுமிகள் மற்றும் கடற்படையினர் அதை இங்கு ஓட்டி வருவார்கள்.

வெளிநாட்டமைச்சர் கூறியது போல், நமது பொருளாதார உறவு முற்றிலும் முக்கியமானது. இது ஏற்கனவே வலுவாக உள்ளது. கொவிட் காலகட்டம் முழுவதிலும் எமது வர்த்தகம் உண்மையில் வளர்ச்சியடைந்தது மிகவும் பிரமிப்பான ஒரு விடயமாகும். குறிப்பாக ஆடை உற்பத்தித் துறையில் தனக்குரிய வலுவான தளத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்பு உபகரணங்களுக்கான உலகளாவிய தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை பங்காற்றியதற்காக நாம் உங்களைப் பாராட்டுகிறோம்.

இருப்பினும், மிகவும் தீர்க்கமான விடயம் யாதெனில், உங்கள் அரசநிதி மற்றும் பணத் தேவைகளுடன், உங்கள் அதிக கடன் பிரச்சினை தெடார்பாக உதவி பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தைரியமான நடவடிக்கையாகும். இங்குள்ள பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், குணப்படுத்தவும் கடின உழைப்பை மேற்கொள்ளும்போது, அமெரிக்கா உங்கள் பங்குதாரராக இருக்கும், மற்றும் இந்த முக்கியமான தருணத்தில் உங்களுடன் பணியாற்றுவதற்கான திறனை நாம் எமது தூதரகத்தில் பலப்படுத்துவோம்.

எமது பொருளாதார மற்றும் வர்த்தக தளத்தை மேலும் வளர்க்க நாம் விரும்புகிறோம். நீங்கள் கூறியது போல் ஆடைத் துறையில் நாம் சிறப்பாக செயற்படுகிறோம். நாம் தகவல் தொழிநுட்பத் துறையில் அதிகம் பணியாற்ற விரும்புகிறோம். பசுமை ஆற்றல் துறையில் நாம் அதிகம் பணியாற்ற விரும்புகிறோம். எமது அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் நடுத்தர மற்றும் சிறு வணிகங்களுடன், குறிப்பாக பெண்களுக்குச் சொந்தமான வணிகங்களுக்கு அதிக வாய்ப்பளிப்பதற்காக அவர்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

அத்துடன் நிச்சயமாக நாம் சுற்றுச்சூழல் தொடர்பான விடயங்களிலும் நாம் வலுவான பங்குதாரர்களாக இருப்பதுடன் எமது சமுத்திரங்களைப் பாதுகாப்பதில் இலங்கையின் பங்குதாரராக இருப்பதையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். மற்றும் அப்பகுதியில் குறிப்பாக காபனீரொட்சைட்டை அதிக அளவில் உறிஞ்சக்கூடிய சதுப்புநில தாவரம் தொடர்பான உங்கள் தலைமைத்துவத்தைப் பாராட்டுகிறோம். அப்பகுதியிலும் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் தொடர்பாகவும் நாம் இன்னும் என்ன செய்ய முடியும் என்பதையும் நாம் பார்ப்போம்.

எனவே, மிக முக்கியமான ஆலோசனைகளின் தொகுப்பினை உங்களுக்கான முக்கியமான ஒரு தருணத்தில் மேற்கொள்கிறோம், அவ்வாறே இது இக்கிரகத்திற்கும் ஒரு முக்கியமான தருணம். சில உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி மதிய உணவின் போது பேசுவோம். விசேடமாக உக்ரைனில் ரஷ்யா மேற்கொள்ளும் மிருகத்தனமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை நம் அனைவருக்கும் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தையும் மற்றும் கொடூரமான எதேச்சதிகார நடத்தை, வற்புறுத்தல், ஆக்கிரமிப்பு ஆகியவற்றின் முன்னால் ஒன்றிணைந்து நிற்பது மற்றும் எம்மை வலுப்படுத்துவது ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்பதை நான் விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அது ரஷ்யாவிலிருந்து வந்தாலும் சரி, உலகெங்கிலும் உள்ள மற்ற எதேச்சதிகாரங்களிலிருந்து வந்தாலும் சரி.

வெளிநாட்டமைச்சர் மிகச்சிறப்பாக கூறியவாறு, விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்குக்கான ஒரு பொது அர்ப்பணிப்பை நாம் இரு தரப்பினரும் கொண்டுள்ளோம். அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய எம்மிரு நாடுகளுமே ஜனநாயக வாழ்க்கை முறையின் புனிதத்தன்மைக்கான ஒரு அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளன. அதை ஒன்றாக இணைந்து பலப்படுத்துவதற்காகவே நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

மீண்டும் இலங்கைக்கு வருவதற்கு மாத்திரமன்றி, எதிர்வரும் மாதங்களில் வொஷிங்டனில் உங்களை வரவேற்பதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம்.

உங்களனைவருக்கும் நன்றி.